# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# மூன்றாம் பத்து

## பத்தாம் திருமொழி - நெறிந்த கருங்குழல்
## இலங்கைக்கு தூது சென்ற திருவடி பிராட்டியைக் கண்டு, சக்கரவர்த்தித் திருமகன் கூறிய சில அடையாளங்களைக் கூறிக் கணையாழி கொடுத்துக் களிப்பித்தல்

** நெறிந்த கருங்குழல் மடவாய்! * நின் அடியேன் விண்ணப்பம் *
செறிந்த மணிமுடிச் சனகன் * சிலை இறுத்து நினைக் கொணர்ந்த
தறிந்து ** அரசு களை கட்ட * அருந்தவத்தோன் இடை விலங்க *
செறிந்த சிலை கொடு தவத்தைச் * சிதைத்ததும் ஓர் அடையாளம் 1

அல்லி அம்பூமலர்க் கோதாய்! * அடி பணிந்தேன் விண்ணப்பம் *
சொல்லுகேன் கேட்டருளாய் * துணை மலர்க்கண் மடமானே! **
எல்லி அம்போது இனிதிருத்தல் * இருந்ததோர் இட வகையில் *
மல்லிகை மாமாலை கொண்டு * அங்கு ஆர்த்ததும் ஓர் அடையாளம் 2

கலக்கிய மாமனத்தனளாய்க் * கைகேசி வரம் வேண்ட *
மலக்கிய மாமனத்தனனாய் * மன்னவனும் மறாதொழிய **
குலக்குமரா! காடுறையப் * போவென்று விடை கொடுப்ப *
இலக்குமணன் தன்னொடும் * அங்கு ஏகியது ஓர் அடையாளம் 3

வார் அணிந்த முலை மடவாய்! * வைதேவீ! விண்ணப்பம் *
தேர் அணிந்த அயோத்தியர் கோன் * பெருந்தேவீ! கேட்டருளாய் **
கூர் அணிந்த வேல் வலவன் * குகனோடும் கங்கை தன்னில் *
சீர் அணிந்த தோழமை * கொண்டதும் ஓர் அடையாளம் 4

மானமரு மென்னோக்கி! * வைதேவீ! விண்ணப்பம் *
கானமரும் கல்லதர் போய்க் * காடுறைந்த காலத்து **
தேனமரும் பொழில் சாரல் * சித்திரகூடத்து இருப்ப *
பால்மொழியாய்! பரத நம்பி * பணிந்ததும் ஓர் அடையாளம் 5

சித்திரகூடத்து இருப்பச் * சிறு காக்கை முலை தீண்ட *
அத்திரமே கொண்டெறிய * அனைத்துலகும் திரிந்தோடி **
வித்தகனே! இராமா ஓ! * நின் அபயம் என்றழைப்ப *
அத்திரமே அதன் கண்ணை * அறுத்ததும் ஓர் அடையாளம் 6

மின்னொத்த நுண்ணிடையாய்! * மெய்யடியேன் விண்ணப்பம் *
பொன்னொத்த மான் ஒன்று * புகுந்து இனிது விளையாட **
நின் அன்பின் வழி நின்று * சிலை பிடித்து எம்பிரான் ஏக *
பின்னே அங்கு இலக்குமணன் * பிரிந்ததும் ஓர் அடையாளம் 7

மைத்தகு மாமலர்க் குழலாய்! * வைதேவீ! விண்ணப்பம் *
ஒத்த புகழ் வானரக் கோன் * உடன் இருந்து நினைத் தேட **
அத்தகு சீர் அயோத்தியர் கோன் * அடையாளம் இவை மொழிந்தான் *
இத்தகையால் அடையாளம் * ஈதவன் கை மோதிரமே 8

** திக்கு நிறை புகழாளன் * தீ வேள்விச் சென்ற நாள் *
மிக்க பெரும் சபை நடுவே * வில்லிறுத்தான் மோதிரம் கண்டு **
ஒக்குமால் அடையாளம் * அனுமான்! என்று உச்சி மேல் *
வைத்துக் கொண்டுகந்தனளால் * மலர்க்குழலாள் சீதையுமே 9

** வாராரும் முலை மடவாள் * வைதேவி தனைக் கண்டு *
சீராரும் திறல் அனுமன் * தெரிந்துரைத்த அடையாளம் **
பாராரும் புகழ்ப் புதுவைப் * பட்டர்பிரான் பாடல் வல்லார் *
ஏராரும் வைகுந்தத்து * இமையவரோடு இருப்பாரே 10

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**